# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 கார்த்திகை 03 வெள்ளிக்கிழமை (19-11-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:307


# பாலம்பிட்டிப்பகுதியில்நேற்று கடும் சண்டை மூண்டது!

## இரு தரப்பினரும் ஆட்லறித் தாக்குதல்

கொழும்பு, நவம்பர் 19

**மன்னார் மாவட்டத்தில் பாலம்பிட்டிப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை முதல் பிற்பகல் வரை படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றது என்று பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் நேற்று மாலை அறிவித்துள்ளது.**

பாலம்பிட்டிப் பிரதேசத்தில் நேற்று அதிகாலை கடும் சண்டை மூண்டது என்றும்—

இந்தச் சண்டை பிற்பகல் வரைதொடர்ந்தது என்றும்—

இரு தரப்புக்கும் இடையில் கடும் ஆட்லறி தாக்குதல்கள் இடம்பெற்றன என்றும்—அது மேலும் தெரிவித்தது.

இந்தச் சண்டையில் 36 படையினர் காயமடைந்தனர் என்றும் —

விடுதலைப் புலிகளின் 33 உறுப்பினர்கள்உயிரிழந்ததாக படையினர் உறுதி செய்தனர் என்றும்—

பெரும் எண்ணிக்கையானவர்கள் காயம் அடைந்தனர் என்றும் — மேலும் அது தெரிவித்தது.

[இ-3]

## தோணிக்கல் பகுதியில் ஷெல்லுக்கு சிறுமி பலி!

### மூவர் காயம் அடைந்தனர்

வவுனியா, நவ. 19

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா நகரம் தோணிக்கல் பகுதியில் நேற்று மாலை வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் சிறுமி ஒருத்தி உயிரிழந்தார்; மூவர் காயம் அடைந்தனர்.

ஹேமலதா (வயது 10) என்ற சிறுமியே உயிரிழந்தார் என்றும்—

காயமடைந்த மூவரும் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் குருநாகல் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர் என்றும் — கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து வவுனியாப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பு நிலவியது.

நகரப் பகுதியில் இருந்து பொதுமக்கள் இடம்பெயர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இ-3-164)

## 2 பொதுமக்கள் உயிரிழப்பு

மன்னார் மாவட்டம் பாலம்பிட்டி, தட்சனார் மருதமடுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற சண்டைகளின் போது இரு பொதுமக்கள் உயிரிழந்தனர்; 6 பொதுமக்கள் காயம் அடைந்தனர்.

அங்கு இடம்பெற்ற சண்டையில் சிக்கியே அவர்கள் உயிரிழந்தனர் என்று வவுனியாவுக்குகிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை —வவுனியா— மன்னார் பாதை யூடான போக்குவரத்து நேற்று இடம் பெறவில்லை. (இ-3-164)

## 4 மாணவர் மரணம் தொடர்பான விசாரணை இன்று நடைபெறும்

### நான்காவது சடலமும் நேற்றுக் கடலில் இருந்து மீட்பு

வடமராட்சி, நவ.19

கல்விச் சுற்றுலா சென்ற சமயம் கடலில் மூழ்கி நான்கு மாணவர்கள் மரணமடைந்த சம்பவம் தொடர்பான மரண விசாரணை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் சு. பா. சுப்பிரமணியம் முன்னிலையில் இன்றும் நடைபெறவிருக்கின்றது.

இந்த விசாரணையில் சாட்சியம் அளிக்க வருமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா, தொண்டமானாறு வெளிக்கள நிலையத் தலைவர் கே. எஸ். குகதாசன், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் செ.சுந்தரேசன், அதே பாடசாலை ஆசிரியையான திருமதி மீனா தங்கராசா ஆகியோருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

மந்திகை ஆதார வைத்திய சாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மரண விசாரணையின்போது ஹாட்லிக்


(10 ஆம் பக்கம் பார்க்க)

## நளினிக்கு வழங்கிய தண்டனையை குறைக்குமாறு சோனியா பரிந்துரை!

புதுடில்லி, நவ. 19

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள நளினியின் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கும்படி ராஜீவ் காந்தியின் துணைவியார் சோனியாகாந்தி ஜனாதிபதி கே.ஆர். நாராயணனுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

தேசிய மகளிர் ஆணையத்தின் முன்னாள் தலைவர் திருமதி மோகினிகிரி நேற்று சோனியாகாந்தியுடன் பேச்சு நடத்திய சமயமே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.



நளினியின் மரணம் மூலம் எட்டு வயதுடைய அவரது குழந்தை அநாதையாவதைத் தாம் விரும்பவில்லை என்றும்-

அதன் காரணமாகத் தாம் ஜனாதிபதிக்கு மனுச் செய்துள்ளதாகவும் சோனியா காந்தி தெரிவித்தார்.

அதேநேரம் — இந்த வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கும்படி சோனியா பணிப்புரை விடுத்துள்ளார் என்று இந்திய வானொலிச் செய்திகள் தெரிவித்தன.

(இ-3)



மற்றைய மூவரையும் சேர்த்திருந்தால் சோனியாவின் புகழ் இன்னும் உச்சத்துக்குப் போயிருக்கும் பாருங்கோ...!

## விமான சேவை இன்றும் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 19

பலாலி—இரத்மலானை பயணிகள் விமான சேவை இன்றும் இடம்பெறாது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

விமான சேவை ஆரம்பிக்கும் திகதி தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் என்றும்—

பொதுமக்கள் வீணாகவந்து அலையத் தேவையில்லை என்றும்—மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சேவையில் ஈடுபட்ட விமானத்தில் ஏற்பட்டுள்ள தொழில் நுட்பக் கோளாறே சேவை இடை நிறுத்தப்பட்டமைக்கு காரணம் எனக் கூறப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் விமான சேவை நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [இ-3]

## பொம்மைவெளியில் மிதிவெடி

கோப்பாய், நவ. 19

பொம்மைவெளி வயல்பகுதியில் பசுமாடு ஒன்று மிதிவெடியில் சிக்கித் தனது முன்னங்காலை இழந்தது. கடந்த செவ்வாய்க்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

## பத்துப்புலிகள் உயிரிழப்பு

வவுனியா, நவ. 19

வன்னியில் பாலம்பிட்டி, தட்சனார்மருதமடு, பெரிய மடு ஆகிய பகுதிகளில் நேற்று இடம்பெற்ற சண்டையில் தமது தரப்பில் பத்துப் பேர் உயிரிழந்தனர் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் விவரங்கள் அறிவிக்கப்படவில்லை. [இ-3]

## பல்கலைக்கழக மாணவர் போராட்டம் நிறுத்தம்

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் மேற்கொண்டு வந்த பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்றுக் கைவிடப்பட்டது.

கலைப்பீடத்தின் 3 ஆம் வருட மாணவன் செல்வநாயகம் சுகந்தனை பிணையில் விடுவிக்க சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார் என்றும்—

இதைத் தொடர்ந்து போராட்டத்தை நிறுத்தியுள்ளதாகவும்-கலைப்பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

(இ-3-9-72)

### கைதாவோரை இங்கு ஆஜர் செய்வது:

## தடுப்பு முகாம் அதிகாரிக்கு இன்னும் அறிவிப்பு வரவில்லை

யாழ்ப்பாணம், நவ. 19

குடாநாட்டில் கைது செய்யப்படுபவர்களை யாழ். மாவட்டத்தில் உள்ள நீதிமன்றங்களில் ஆஜர் செய்வது தொடர்பாக உத்தியோக பூர்வமான அறிவுறுத்தல் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்று காங்கேசன் துறை பயங்கரவாதத் தடுப்பு முகாம் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அங்கு விஜயம் மேற்கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி எஸ். சிறீதரனிடமே அவர் மேற்கண்ட விடயத்தை தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வமான அறிவிப்பு தமக்கு கிடைக்காததால் கைதிகளை அநுராதபுரம் நீதிமன்றத்திலேயே

[10 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கு — கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை

### ஐ. தே. க. தேர்தல் விஞ்ஞாபனம்

கொழும்பு, நவ. 19

எதிர்வரும் தேர்தலில் வெற்றியடையும் பட்சத்தில் வடக்கு — கிழக்கில் இடைக்கால நிர்வாகசபை ஒன்று உருவாக்கப்படும் என்று ஐ. தே. க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலை ஒட்டி ஐ. தே. க. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று வெளிட்டு பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தியது.

அங்கு வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## வீரசிங்கம் கனகரத்தினம்

[சொரூபி லொறி உரிமையாளரும்,
புகையிலை வர்த்தகரும் ]

கொக்குவில் குளப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை தட்டாதெருவை வதிவிடமாகவும் கொண்ட வீரசிங்கம் கனகரத்தினம் 18—11—1999 வியாழக் கிழமை காலை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் தங்கச்சிமுத்து ஆகியோரின் அன்பு மகனும், காலஞ் சென்ற மயில் வாகனம் அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், பாலசொரூபி, பாலஜெயந்தி (U.K.), திருக்குமார் (ஜேர்மனி), கருணாவதி, சர்வதயாளன் (பிரான்ஸ்), அரவிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கு. சரவணநாதன், A.T. புஸ்பநாதன் (U.K.), தயாவதி (ஜேர்மனி), சொர்ணவதனா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், யாழ். இந்துஆரம்ப பாடசாலை மாணவர்களான சோதிராஜ் தரம் (3'C') அமலராஜ் (தரம் 1'B') மற்றும் தர்சிகா (U.K) தயான் (U.K) கௌசிகன் (ஜேர்மனி) கஜனி (ஜேர்மனி), தாட்சாயினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் கண்மணி, காலஞ்சென்ற இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்பு மைத்துனரும், பொ.T. துரைசிங்கம் (ஐயா) அவர்களின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-11-1999) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிககு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தானக்கிரியைகளுக்காகக் கோம்பையன் மணல மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(தகவல்)
குழந்தைவேலு சரவணநாதன்.
(மருமகன்)

47 (21, 23) அரசடி வீதி,
வண்ணார்பண்ணை,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

(71101)

## மயில்வாகனம் கனகரத்தினம்

(ஓய்வுபெற்ற கணக்காளர், உள்ளூராட்சித் திணைக்களம்)

வட்டுக்கோட்டை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கனடாவில் வசித்தவருமான மயில்வாகனம் கனகரத்தினம் அவர்கள் 14—11—99 ஞாயிறு காலமானார்.

இவர் சரஸ்வதியின் (கனடா) அன்புக்கணவரும், க. ஞானசேகரம் (அமெரிக்கா), திருமதி சறோஜினி தங்கவேலு (கனடா), திருமதி கௌரி ஸ்ரீ பாலேந்திரா [ஹற்றன்] ஆகியோரின் அருமைத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் கனடாவில 14—11—99-ல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஸ்ரீ கௌரி (மகள்),
Dr புண்ணியமூர்த்தி ஸ்ரீபாலேந்திரா
(மருமகன்).

சித்தன்கேணி.

[71079]

## நாரணாபிள்ளை சின்னத்தங்கம்

துன்னாலை கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்த நாரணாபிள்ளை சின்னத்தங்கம் 18 - 11 - 99 காலை காலமானார்.

இவர் நாரணாபிள்ளையின் அன்பு மனைவியும் சரஸ்வதி, அருணகிரிநாதன் (ஆவரங்கால்), தம்பாபிள்ளை [துணுக்காய் ப. நோ. கூ. சங்க முகாமையாளர்], மாணிக்கவாசகர் (ஜேர்மனி), குமரகுருநாதன் [G.S., வல்லிபுரம்] ஆகியோரின் அன்புத்தாயாரும் ஈஸ்வரி (ஆவரங்கால்), யோகேஸ்வரி, கமலேஸ்வரி, செல்லம்மா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-11-99) வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு குடும்ப மயானத்தில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
நா. அருணகிரிநாதன்.
நா. குமரகுருநாதன்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி,
தொலைபேசி இல. 070 - 21 - 2416.

(சி/9900)

## திருமதி ஆரோக்கியம் பேர்டிணட்

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தில் வசித்து பின்பு நீர்கொழும்பில் வசித்து வந்தவருமான திருமதி ஆரோக்கியம் பேர்டிணட் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் யோசவ் பேர்டிணட் (புனித சம்பத்தரிசியார் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் Dr. W. A. பேர்டிணட் அல்பிறெட், பிலிப், ஜெஸ்மின் ஆசீர்வாதம், யூபேட், ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஸ்ரெல்லா, ஆன், பத்மா ஜெயராஜா, ஆசீர்வாதம் யோய்ஸ் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நீர்கொழும்பில் 20 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். இந்த அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
Dr. W, A, Ferdenad

Tel 031-22078,
Negombo.

(சி/9901)

## சனசமூக நிலையங்கள் இணைவு

வலி.கிழக்கு, நவ, 19

சிறுப்பிட்டி அண்ணா சனசமூக நிலையமும் சிறுப்பிட்டி உதயதாரகை சனசமூக நிலையமும் ஒன்றாக இணைக்கப்பட்டு 'கலை ஒளி' சனசமூக நிலையம் எனப் பொது மக்களால் பெயர்மாற்றப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சனசமூக நிலையங்களின் உபகிளைகளின் சகல செயற்பாடுகளும் கலை ஒளி சனசமூக நிலையத்தின் கீழ் செயற்பட இப்பகுதிப் பொதுமக்கள் ஏகமனதாக இணங்கித் தீர்மானம் எடுத்துள்ளனர். இதற்கென புதிய நிர்வாக சபை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-180)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணத்தின் மூத்த சட்டத்தரணி எஸ். கனகரத்தினம் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானத்தினர் ஏற்பாடு செய்துள்ள இந்த விழாவுக்கு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (இ-3)

★ ★ ★

பருத்தித்துறை, நவ. 19

ஞானியார் கல்விக் கழகம் நடத்தும் பாராட்டு விழா வடஇந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை 9.30 மணியளவில் சங்கத் தலைவர் வே. நவரத்தினராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் 1999 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் தகுதி பெற்றவர்களும் மாகாண ரீதியில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் தேசிய மட்டத்துக்குத் தெரிவான மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். பிரதம விருந்தினராக வடமராட்சி கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா கலந்து கொண்டு பரிசில்களை வழங்கவுள்ளார்.

(ஐ-118)


**நாகஸ்ஸ்**
சுன்னாகம்

விஜய் — சாலினி
**காதலுக்கு மரியாதை**
காட்சிகள்:
11-00, 2-30.
(புதிய நேரம்)
வெகு விரைவில்
உழைப்பாளி
(71105)

**ராஜா**
யாழ்ப்பாணம்

விஜய் - சுவாதி
மற்றும் பலர் நடித்த
**செல்வா**
10-30, 2-30.
(சி/9815)

**லிபேட்டி** அச்சுவேலி.
அஜித், சுவாதி
நடித்த
**வான்மதி**
காட்சிகள் 10.30, 2-30
T.P.No.070-212223
070-212678
[illegible]

**வணிகப் பிரமுகர்களே!**

மேலும் மேலும் உங்கள் பெயர் விலாசங்களை
**2000 ஆண்டுக்கான**
கலண்டர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்யுங்கள்.
வகை வகையான
வண்ணக் கலண்டர்ப் படங்கள்
எம்மிடமுண்டு ..........

தொகையாகப் பெறுபவர்களுக்கு சகாய விலை சலுகை

**பாலன் புத்தக நிலையம்**
87, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்.
[வைத்தீஸ்வராக் கல்லூரி அருகில்]
தொலைபேசி இல. 2113
[71097]


## இதய அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இறுதி ஆண்டு மாணவன்
உ. சுகாஜனனின்
தந்தையார்

**உருத்திரமூர்த்தி**

அவர்கள் 17-11-99 அன்று காலமானதையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

இறுதி வருட B பிரிவு மாணவர்கள்
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/9905)

## ஹாட்லியின் மைந்தர்களுக்கு இதய அஞ்சலி

17 - 11 - 1999 இல் கல்விச் சுற்றுலாவின்போது எம்மையெல்லாம் தவிக்கவிட்டு பிரிந்து சென்ற 4 மாணவர்களான

செல்வன் **சுந்தரலிங்கம் சிவோத்தமன்**
செல்வன் **பாலகிருஷ்ணன் பிரதீபன்**
செல்வன் **பூரணமூர்த்தி கந்தர்வன்**
செல்வன் **சிவநாதன் ரவிசங்கர்**

ஆகியோருக்கு எங்கள் கல்லூரி சமூகத்தின் சார்பில் இதய அஞ்சலியைச் செலுத்துகிறோம், இவர்களை இழந்து தவிக்கும் பெற்றோர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
பழைய மாணவர் சங்கம்.
யா/ஹாட்லிக் கல்லூரி,
பருத்தித்துறை.

(சி/9899)


**சாயி ஓடியோ அன் வீடியோ**
ஆதரவில்

சுன்னாகம்
**றோட்டரக்ட் கழகம்**
நடத்தும்
க.பொ.த (சா/த)
மாணவர்களுக்கான

**முன்னோடிக் கருத்தரங்கு**

இடம்; யா/ யூனியன் கல்லூரி
காலம்:

| திகதி | | பாடம் |
|---|---|---|
| 21 - 11 - 1999 | — | தமிழ் |
| 22 - 11 - 1999 | — | சமூகக்கல்வி |
| 27 - 11 - 1999 | — | கணிதம் |
| 28 - 11 - 1999 | — | விஞ்ஞானம் |

★ பாடங்கள் அனுபவமிக்க ஆசிரியர்களால் நடத்தப்படும்.
★ பாடக்குறிப்புகள் வழங்கப்படும்.

– செயற்திட்ட இயக்குநர்

(சி/9903)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம். நவ. 19

யாழ் குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் (இம்மாதம் 17 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு;

**சங்கானை**

[123352ஏ], [125195ஏ], [125195பி], [125361ஏ],

**யாழ்ப்பாணம்**

[116170ஏ], [116170பி], [119712ஏ], [124519ஏ], [124825ஏ], [126526ஏ], [126526பி], [126526சி], [126578ஏ], [126605ஏ], (126619ஏ), 126674ஏ), [126708ஏ), ((126715], (126726ஏ), (126732ஏ[.

**சாவெட்டி**

(120140ஏ). (120140பி). (120140சி), (120140டி).

**கோப்பாய்**

(116788ஏ), [116797ஏ), (116797பி], (116799ஏ), (121101ஏ). [121101பி], [121216ஏ], ()121216பி] (121216சி), (124127ஏ), (124127பி), (124127சி), (124127டி), (124128ஏ), (124134ஏ), (124154ஏ), (124154பி).

**நல்லூர்**

(126711ஏ), (126711பி), (121693ஏ), (121693பி), (123415ஏ), (123415பி, (123456ஏ), (123473ஏ), (123473பி), (125101ஏ), (125101பி), (125168ஏ), (125188ஏ), (127401ஏ), (127418ஏ),

**சண்டிலிப்பாய்**

(108879ஏ), (108879பி), (119464ஏ), (119464பி), (123348ஏ), (123516ஏ), 123516பி), [125072ஏ], [125299ஏ], [125299பி), [125442ஏ], [125442பி),

**தெல்லிப்பழை**

[123499ஏ], [123499பி], [125133ஏ],

**உடுவில்**

(121733ஏ), (123388ஏ), (123542ஏ), (123542பி), (123542சி), (125006ஏ), (125006பி), (125022ஏ), (125022பி), (125022சி), (127403ஏ), (127488ஏ), (127488பி).


யா/தன்னியர்மடம்

**பழைய மாணவர் சங்கம்**

**பொதுக்கூட்டம்**

இடம்: பாடசாலை மண்டபம்
காலம்: 20-11-99 (சனி) மாலை 3.30 புதிய நேரம்
விடயம்: புதிய நிர்வாகத் தெரிவும், இதர பல விடயங்களும்.

சகல பழைய மாணவர்களையும் தவறாது இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

சங். சகோ. பேரி வில்பிரட்,
தலைவர்.
திருமதி M.R.C. கொன்ஸ்ரன்ரைன்,
செயலாளர்.
(71094)



நாளை ஆரம்பமாகிறது...

**யாழ். நகரிலும் தீவகத்திலும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை-1999 டிசெம்பர்**

(முன்னோடிப் பரீட்சை)

பரீட்சை நடைபெறவுள்ள நிலையங்கள்:

- நியூ பிறைற் கல்வி நிறுவனம், மார்ட்டின் வீதி. யாழ்ப்பாணம்.
- கலைவாணி கல்வி நிறுவனம், கோப்பாய்
- மணி கல்வி நிறுவனம், வேலணை.
- ஜீவபாரதி கல்வி நிறுவனம், நயினாதீவு.
- பிரத்தியேக வகுப்புக்கள், யாழ்ப்பாணம்.

P. உமாசங்கர் & கமலதாசன்
முன்னோடிப் பரீட்சைகள் நிறுவனம்,
யாழ்ப்பாணம்,
(71055)



**கண்ணீர் அஞ்சலி**

பளைப்பிரதேச செயலக கணக்குப் பதிவாளர்
**திருமதி பிறேமா இரவீந்திரன்**
அவர்களின் அன்புத் தாயாராகிய
**திருமதி இளையப்பா அன்னப்பிள்ளை**
(இளைப்பாறிய ஆசிரியை)

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலர், உத்தியோகத்தர்கள்,
வெளிக்கள உத்தியோகத்தர்கள்.
கிராம உத்தியோகத்தர்கள்.

பிரதேச செயலகம்,
பளை.
(71107)


# குருநகர்ப் பகுதியில் பெரும்பாலான வீதிகள் மிக மோசமான நிலையில்

யாழ்ப்பாணம், நவ. 19

குருநகர்ப் பகுதியில் முக்கிய வீதிகள் திருத்தப்படாமையினால் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நீண்ட காலமாகத் திருத்தப்படாமலிருக்கும் இந்த வீதிகளில் மேடும் பள்ளமும், குழிகளும் நிறைந்து காணப்படுவதுடன் மழை காலங்களில் இந்தப் பள்ளங்களில் தேங்கி நிற்கும் சேற்றுத் தண்ணீர் வாகனங்கள் செல்லும் போது பாதசாரிகள் மீது வீசப்படுகிறது.

டேவிற் வீதி, இராஜேந்திரா வீதி, இராஜசிங்கம் வீதி, பூங்கா வீதி, புதிய பூங்கா வீதி, ஐஸ்பிளான்ற் வீதி, மத்திய மேற்கு வீதி, தண்ணீர் தாங்கி வீதி, பெஸ்கி சனசமூக நிலைய வீதி, சென்ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை வீதி, சின்னக்கடை வீதி, பற்றிக்ஸ்(சேமக்காலை) வீதி போன்றவையே திருத்தம் செய்யப்படாமல் மிக மோசமான நிலையில் உள்ளன.

இதேவேளை — இப்பகுதியிலுள்ள ஆறு வீதிகள் திருத்தம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது (ஐ-5)

## வீடு திருத்தும் கொடுப்பனவு

வலிகாமம் தெற்கு, நவ.19

வன்செயல்கள் காரணமாக வீடுகள் சேதமடைந்த — வறுமைக் கோட்டின் கீழ் வாழும் — வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 162 குடும்பங்களுக்கு வீடுகளைத்திருத்துவதற்கான இழப்பீட்டுத் தொகையான 25 ஆயிரம் ரூபாவின் நாலாம் கட்ட கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட உள்ளன.

இக்குடும்பங்களுக்குகொடுப்பனவுகள் வழங்கப்படுவதற்கான பூரணப்படுத்தப்பட்ட ஆவணங்கள் யாழ்ப்பாணம் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டதாக செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ். ஆர். ஜெபப்பிரகாசம் தெரிவித்தார்.

(6 - 152)

## காளி சிலை திருட்டு

வலி வடக்கு, நவ. 19

தெல்லிப்பழை கிழக்கு காளி கோயிலில் இருந்த சுமார் 60 வருடங்கள் பழமை வாய்ந்த காளி சிலை ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருடப்பட்டுள்ளது.

நாளாந்தம் இக் கோவிலில் பூசை இடம்பெற்று வருகின்றது வெள்ளிக்கிழமை பூசை முடிந்து சென்ற பின்னர் சனிக்கிழமை ஆலயம் திறக்கப்பட்ட போது சிலை திருடப்பட்டுள்ளமை கண்டு பிடிக்கப்பட்டது,

ஐம்பொன்னால் உருவாக்கப்பட்ட இச்சிலை மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும்.

இது பற்றி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (6-86)


**புலமைப் பரிசில்-2000**

14 ஆவது பரீட்சையில் அதி கூடிய புள்ளி பெற்றோர்

ஜெ. கிருத்திகா
யா/. இ. ஆ. பா.
ஜெ. டெசிந்தன்
யா/. மத்திய கல்லூரி
பா. தர்மினி
யா/ வட. இ. ம. க.
பெ. கிருஸ்ணப்பிரியா
யா/ சுண்டுக்குளி ம. கல்.
இ. ஜலதாரினி
யா/ இ. ம. ஆ. பா.
யோ. தர்ஷிகா
யா/ இ. ஆ. பா.

அடுத்த பரீட்சை 21.11.99
மாதாந்தப் பரீட்சை வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம்.

BOND யாழ். நகர்



**CHRISTMAS CAROL SERVICE**
presented by
**JAFFNA COLLEGE**

**'THE DONKEY' S CHRISTMAS STORY'**

on
**Sunday 21 st November 1999**
At
**(4 00 p m. SLT)**
in the
Cathedral, Vaddukoddai.
All are Welcome

G. RAJANAYAGAM
Principal

Jaffna College,
Vaddukoddai.
(C/9896)



**31 ஆம் நாள் நினைவஞ்சலி**

(20-11-1999)



அமரர்
**வீரகத்திப்பிள்ளை இராசசேகரம்**

தோற்றம் 06--03--1908
மறைவு 21--10--1999

எமது பாடசாலையின் ஸ்தாபகரின் வாரிசுகளில் ஒருவராகிய ஐயா அவர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்காக நீண்டகாலம் தொடர்ச்சியாக ஆக்கமும் ஊக்கமும் தந்து எம்மை உற்சாகப்படுத்தி பாடசாலையின் உயர்வுக்காக இறுதி மூச்சு வரை அயராது சேவையாற்றி உள்ளார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய செல்வச் சந்நிதி முருகனின் பாதங்களைப் பணிகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள். ஊழியர்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

யா/தொண்டமனாறு,
வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்,
தொண்டமனாறு.
[சி/9894]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

தனியார் கல்வி நிறுவனத்திற்கு தேவையான தளபாடம் உடன் தேவை. தொடர்பு:இல. 01, கோணாவளை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (71081)

### O/L 99 வகுப்புக்கள்

இறுதிநேர வகுப்புக்கள் ஆங்கிலம் கணிதத்தில் 30 மணித்தியாலங்கள் கொண்ட 15 நாள்கள் Papar Class Distinction, Credit பெறுபேறடையக் கற்பிக்கப்படும். அனுபவமுள்ள B.sc (Cey) 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின் வீதி, திருநெல்வேலி. (70979)

### வீடு வாடகைக்கு

கோப்பாய் வடக்கு, பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள (AGA காரியாலயத்துக்கு அருகில்) நிரந்தர பாவிப்பில் இருக்கும் சகல வசதிகளும் உள்ளடங்கிய விரைவில் மின்சாரம் கிடைக்க உள்ளதுமான வீடு வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: முத்துவேல், கோப்பாய் வடக்கு. (71061)

### விற்பனைக்கு

வீட்டுப்பாவனைப் பொருள்கள் கதிரை, மேசை, கட்டில் Chest of drawer, வாங்கு, Fridge, மோட்டார், கூரை மின் விசிறி Iron Box மற்றும் மின்சார உபகரணங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு முத்துவேல் கோப்பாய் வடக்கு, AGA அலுவலகம் அருகில். (71062)

படப் பிரதிகள் அவற்றுக்கான 'றக்'குகள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. மற்றும் படப் பிரதிகள் சுத்திகரிக்கும் இயந்திரமும் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு இல. 27, சப்பல் வீதி. யாழ்ப்பாணம். T.P NO. 2765 (71052)

### தவறிவிட்டது

கார்த்திகேசு விசுவலிங்கம் என்பவரதுதேசிய அ.அட்டை (200390695V) யாழ். ஆஸ்பத்திரிக்கும் குலம்கிறீம் ஹவுஸிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ் வரும் முகவரியில் ஒப்படைத்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். 28/16, மணற்தறைஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (71050)

### விண்ணப்பப் படிவம்

வடக்கு—கிழக்குமாகாணப் பொதுச்சேவையின் சாரதி வகுப்பு II ற்கான படிவம் விற்பனையாகின்றது, நாயகபாலன், மானிப்பாய். (71091)

### தவறிவிட்டது

ஆஸ்பத்திரி வீதி, மூளாய் என்னும் முகவரியைச் சேர்ந்த சோமசுந்தரம் கலா என்பவரது தேசிய அ. அட்டை [746182872V], விசேட அ. அட்டை, தொழில் நுட்பக் கல்லூரி அடையாள அட்டை [VT564] என்பன யாழ். போதனா வைத்தியசாலையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் அல்லது ஞானம்ஸ் பான்ஸிஹவுஸ் யாழ்ப்பாணத்தில் ஒப்படைத்துதவவும். [71056]

ஆலடி ஒழுங்கை, நீர்வேலி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த இரத்தினம் துரைச்சாமி என்பவரது தேசிய அ. அ.[இல-356561759 V], யாழ்ப்பாணம், மீன் சந்தையடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நிர்மலன் நகை மாளிகை 190, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும்முகவரியில்ஒப்படைத்து உதவவும் (71057]

## வெளிவாரி விரிவுரைகள்
## கல்வியாண்டு 2000/2001

யாழ், பேராதனை, இலங்கை பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

- கலைமுதல் தேர்வு (G. A. Q)
- வணிகமுதல்தேர்வு (First in Commerce)
- விஞ்ஞான முதல்தேர்வு (கணிதமும் புள்ளி விபரவியலும்)

★ க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.
★ அண்மையில் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி முடிவுகளை எதிர்பார்த்திருப்பவர்களும் விரிவுரைகளில் கலந்து கொள்ளலாம்.
★ பல்கலைக்கழகத்தின் பதிவுகள் யாவும் எம்மால் செய்து தரப்படும்.
★ விவரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.
★ விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

விவரங்களுக்கு: உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
57/13 ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி முன்பாக) (71075)

## கைத்தொழிற்பயிற்சி

### யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்

கைதடியில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் மேற்படி பயிற்சி பெற விரும்பும் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு அண்மையில் வசிக்கும் பெண் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 28-11-99-ற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தலைவர் / செயலாளர்
யாழ். விழிப்புலனற்றோர் சங்கம்,
228, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (71039)

## வாழ்த்துகின்றோம்



### Dr. V. சிவராசா J.P.
(FAMILY CLINIC)

கொக்குவில், சுன்னாகம் ஆகிய இடங்களில்
வைத்திய சேவைசெய்யும்
Dr. V. சிவராசா அவர்கள்

அகில இலங்கை சமாதான நீதிவான் நியமனம் பெற்றமையை வாழ்த்துகின்றோம்.

ப. பாலகிருஷ்ணர்,
கிருஷ்ணா தொலைத் தொடர்பகம்
உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தொலைபேசி எண்:
உள்ளூர்: 070 — 212588
வெளியூர்: 0094— 70 — 212588 (71051)

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்
நடத்தும்

## இசைநாடக - நாட்டுக்கூத்துப் போட்டி விழா -- 1999

### நிகழ்வு III

பிரதம விருந்தினர்: கலாநிதி க. குணராஜா
பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்

சிறப்புவிருந்தினர்கள்: திரு. ப. விக்னேஸ்வரன்
வலயக் கல்விப் பணிப்பாளர், தீவகம்
திரு. ஜே. எக்ஸ். செல்வநாயகம்
உதவி அரசாங்க அதிபர், ஊர்காவற்றுறை
திரு. சு. புத்திசிகாமணி
உதவி அரசாங்க அதிபர், பளை

இடம்: நல்லூர் இளங்கலைஞர் மன்றம்
காலம்: 20-11-99 9.00 - 6 00 மணி வரை

இடம்பெறும் போட்டி நிகழ்வுகள்

ஆட்டநாட்டுக்கூத்து 01 மணித்தியாலம்

1. இலங்கேஸ்வரன்
வண. பிதா பி. எம் இமானுவல்
நெறியாள்கையில் — பருத்தித்துறை
2. காட்டகத்தே காமுகனும் கதைவிடாத வீமனும்
வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழு
3. பாஞ்சாலி சபதம்
வண. பிதா பி. எம். இமானுவல்
நெறியாள்கையில் — பருத்தித்துறை

இசைநாடகம் 01 மணித்தியாலம்

1. சத்தியவான் சாவித்திரி
எஸ். எஸ். இரத்தினகுமார் குழுவினர் — பளை
2. கோவலன் கண்ணகி
இணுவில் இளந்தொண்டர் சபை
3. பூதத்தம்பி
நடிகமணி கலாமன்றம் — மயிலங்காடு
4. நல்ல தங்காள்
சரஸ்வதி சனசமூக நிலையம் — உரும்பிராய்
5. மயான காண்டம்
ஆ. அமிர்நாயகம் குழுவினர் — நெடுந்தீவு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் இலவசம்

பாரம்பரிய கலைகள்
மேம்பாட்டுக் கழகம்.

யாழ்ப்பாணம். (71078)

## சாவகச்சேரி நகரசபை
## 2000 ஆம் ஆண்டிற்கான
## ஆட்டிறைச்சிக் கடை, மாட்டிறைச்சிக்கடைகளுக்கான
# மீள் கேள்வி அறிவித்தல்

01—01—2000 தொடக்கம் 31—12—2000 வரையிலான காலப் பகுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபாரம்/சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 30 11—99 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் அன்றைய தினமே முற்பகல் 11.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

| விவரம் | கடை இல. | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புக் கட்டணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. ஆட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ். 1 | ரூ 84000/- | 1000/- | 500/- |
| 2. ஆட்டிறைச்சிக்கடை | ,, 2 | ரூ 96000/- | 1000/- | 500/- |
| 3. மாட்டிறைச்சிக்கடை | ,, 3 | ரூ. 86000/- | 1000/- | 500/- |
| 4. மாட்டிறைச்சிக்கடை | ,, 4 | ரூ. 97000/- | 1000/- | 500/- |

மேற்படி வைப்புப்பணம், கேள்விப் படிவம் கட்டணங்கள் செலுத்துவதின் பேரில் 27—11—99 ஆம் திகதி 12.30 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா.

சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படும். மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாக செலுத்தப்படல் வேண்டும்.

இது சம்பந்தமாக ஏனைய விவரங்கள் இவ்வலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மு. செ. சரவணபவ
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
17—11—99 (சி/9889)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலக சக உத்தியோகத்தர்
திரு. கந்தசாமி பூரணமூர்த்தியின்,
அன்பு மகனும்,
யா/ ஹாட்லிக் கல்லூரி க. பொ. த. (உயர்தர) 2000-
உயிரியல் விஞ்ஞான மாணவனுமாகிய

**கந்தர்வன்**

அவர்களின் அகால மரணத்தால் துயருறும் பெற்றோர், உடன்பிறப்புக்கள், நண்பர்கள் யாவருடனும், எமது கண்ணீரையும் காணிக்கையாக்குகிறோம்.

உதவித் தேர்தல்கள் ஆணையாளரும்,
உத்தியோகத்தர்களும்.

**தேர்தல்கள் அலுவலகம் - யாழ்ப்பாணம்.**

(71080)

சிவமயம்

# ஆரம்ப விழா - அழைப்பு

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் கார்த்திகைத் திங்கள் 3 ஆம் நாள் இன்று (19—11—1999) வெள்ளிக்கிழமை காலை 6.30 முதல் 8.30 வரையுள்ள உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்,

**SRI MURUGAN AGENCY**
**POST OFFICE**
**AND COMPUTER**
**DESIGN AND PRINTING**

ஆகிய சேவைகளை ஆரம்பிக்க நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது வாடிக்கையாளர் யாவரும் இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் மிக அன்புடன் அழைக்கின்றோம்.

**ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின்**
**மேலும் பல சேவைகள்:**

சகல தபால் சேவைகள், தபால் முத்திரைகள், மணி ஓடர்கள், றேடியோ, T. V. லைசென்ஸ், உள் நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி சேவை, பக்ஸ் வசதிகள் போட்டோஸ்ரற், தமிழ், ஆங்கில ரைப்பிங், லமினேட்டிங்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்,
**ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தார்.**

தொலைபேசி: 021-2170,2670
தொலை நகல்: 021-3214

303, கே.கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/ 9876)

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ். இந்துக் கல்லூரி வர்த்தக மாணவர் ஒன்றியத்தின் வரவு' இதழ் வெளியீட்டு விழாவும் வணிகதினமும் இன்று வெள்ளி காலை 9.30 மணிக்கு குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

யாழ்.பல்கலைக் கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா முதன்மை விருந்தினராக இதில் கலந்து கொள்வார். (ஐ-3)

## கலந்துரையாடல்

வலி.கிழக்கு, நவ 19

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில்உள்ள பெருந்தெருக்கள், கிராமிய மட்டத்தில் பேணப்படும் தெருக்கள் யாவற்றையும் உள்ளடக்கி அபிவிருந்தி செய்தல், புனரமைத்தல் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை10.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமது பகுதி வீதிகளின் முழு விவரங்களுடனும் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(ஐ-30)

## பரிசளிப்பு விழா

நெல்லியடி, நவ. 19

கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9. மணிக்கு அதிபர் க. அம்பலவாணர் தலைமையில் நடைபெறும்.

பிரதமவிருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் விஞ்ஞானபீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் கலந்து கொள்வார்.

(ஐ-109)

## கப்பலில் சிமெந்து

யாழ்ப்பாணம், நவ. 19

கடந்த செவ்வாயன்று பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்துசேர்ந்த 'இந்துருவலி' கப்பலில் கட்டடப் பொருள்கள் கூட்டுத்தாபனத்திற்கான ஒரு தொகுதி சிமெந்து மற்றும் தனியாருக்கான பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

(இ-10-9)

சரசாலை மத்தி

# அம்பாள் மழலைகள் கல்விப் பூங்கா
# கட்டடத் திறப்பு விழா

காலம்: 19 - 11 - 1999 வெள்ளிக்கிழமை
பிற்பகல் 1-30 மணி

தலைவர்; மா குலேந்திரன்

முதன்மை விருந்தினர்: பு. சுந்தரம்பிள்ளை
(பிரதேச செயலர், தென்மராட்சி)

சிறப்பு விருந்தினர்கள்:

கு. ந. பாலச்சந்திரன்
(செயலாளர் பிரதேச சபை, சாவகச்சேரி)

திரு. மு. செ. சரவணபவ
(செயலாளர், நகரசபை, சாவகச்சேரி)

க. கோபாலகிருஷ்ணன் தம்பதிகள்
(ஓய்வுபெற்ற அதிபரும், அம்பாள் கல்விப் பூங்கா ஆலோசகரும்)

மீசாலை சித்திரவேலாயுதர் வில்லிசைக் குழுவின் வில்லிசை இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர உதவி:
வெளிப்புற படப்பிடிப்பில் முன்னனி நிறுவனம்
**வீடியோ ஜெயம்**
நுணாவில் மத்தி, சாவகச்சேரி.

(சி/9879)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும்
# நன்றி நவிலலும்



அமரர்

**வீரகத்திப்பிள்ளை இராசசேகரம் J.P.**

தொண்டமானாறு
(உரிமையாளர் வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ் சேகரம் அன் சன்ஸ் யாழ்ப்பாணம்).

வையத்துள் 06-03-1908 — வானுலகுள் 21-10-1999

ஊரார் போற்றும் உத்தம சீலராய்
பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
எம் குடும்பத்தின் குலதீபமாய் இருந்து
எம் அனைவரையும் வழி நடத்திய
அன்புத் தெய்வமே
உங்கள் ஆத்மா சாந்திபெற
செல்வச் சந்நிதி முருகனை வேண்டுகின்றோம்,

எமது பாசமிகு தந்தையார் இறைவனடி எய்திய செய்தி அறிந்து அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும், எமது தந்தையார் யாழ். போதனா வைத்தியசாலையில் சுகயீனமுற்றிருந்த வேளை உதவி புரிந்த வைத்தியர்கள், தாதியர், ஊழியர்கள் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு,

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகத் தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நாளை (20-11-99) சனிக்கிழமை காலை நடைபெறவிருக்கும் விசேட அபிஷேகத்திலும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறவிருக்கும் அன்னதானத்திலும் பங்குகொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இல. 09, றக்கா ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(71030)

KOBE KOBE KOBE KOBE KOBE

பணத்தை திருப்பி பெறும் உத்தரவாதம்
நம். 1
இலங்கையில் அதிகளவு விற்பனை
**KOBE**
**UHF/VHF கலர் T.V பூஸ்டர்**

- இலங்கை T.V சனல்களுக்கு ஏற்ப விசேடமாக வடிவமைக்கப்பட்டவை.
- வெவ்வேறு இடங்களுக்கு ஏற்றவாறு பொருத்தக்கூடிய 14 மாதிரிகள்
- விற்பனையின் பின்னர் சிறந்த விரைவான திருத்த சேவை

KOBE UHF அன்டனாக்கள் எல்லா UHF சனல்களுக்கும்
VHF அன்டனாக்கள் ரூபவாகினி, ITN சனல்களுக்கு

பூஸ்டர்கள் தெரிவு செய்ய 32 மொடல்கள்
சகல சனல்களிலும் பூரணத்துவமான படங்களுக்கு, தனியான அன்டனாக்கள் பல பிரதேசங்களுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. நாடுகள் பூராவும் பெற்றுக்கொள்ளப்படும்

விசேடமாக UHF / VHF பூஸ்டர்கள்
2 UHF IN PUT 2 VHF INPUT
ONE OUTPUT

அன்டனா நிபுணர்கள்:
LANKA NIPPON ANTENNA PVT LTD.
18, Keyzer Street, Colombo 11.
Tel: 324726, 437735, Fax: 437736

Finally it is KOBE you will settle for ........!
must be KOBE ...... the Original
"நிப்பொனின்" சகோதர நிறுவனம்

KOBE KOBE KOBE KOBE KOBE KOBE KOBE KOBE KOBE KOBE

(சி/9857)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானக் கல்லூரி

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

() இந்து நாகரிகம் ()
( வெளிவாரிப் பட்டப்படிப்பு )

| | | | |
|---|---|---|---|
| G. A Q. | — | சனி, ஞாயிறு | 3.00 மணி |
| B. A ( Part 1 ) | — | ,, | 4 00 மணி |
| B. A ( Final ) | — | ,, | 5.00 மணி |

( யாழ்ப்பாணம் – பேராதனை )


ஆரம்பம்:- 20 - 11 - 99 சனிக்கிழமை
வினாவிடை வகுப்புக்கள் மேலதிகமாக நடத்தப்படும்.

A/L 2000 - வினாவிடை
2001 - இந்துநாகரிகம்
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

ஆசிரியர்:
திரு. சிவமகாலிங்கம் B. A – Dip. in Ed.

[71073]

# கண்ணீர் அஞ்சலி



மட்டுவில் மண்ணின் மைந்தனும், எமது ஆருயிர் நண்பனுமான

## தம்பிப்பிள்ளை பாலசிங்கம்

கனடாவில் காலமான துயரச் செய்தி கேட்டுக் கலங்குவதுடன் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவர்கள் துன்பத்திலும் பங்கு கொள்கின்றோம்.

மட்டுவில் நண்பர்கள்.

(71070)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி சந்திரசேகரம்
[ ஓய்வுபெற்ற P. W.D. ஓவசியர், R M C, R. D. A. ]

தோற்றம்: 24 – 07 – 1927
மறைவு: 25 - 11 – 1993

ஆண்டு ஆறு ஆயினும்
தந்தையே எம் துயர் ஆறிடுமோ?

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

'அன்பகம்',
இணுவில் மேற்கு,
இணுவில்

(71045)

# ஆன்மீகக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 19

நவாலி தென்னிந்திய திருச்சபையின் 139ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டிய ஆன்மீக புத்துயிர்க் கூட்டங்கள் இன்றுமுதல் மூன்று தினங்கள் நவாலி தேவாலய திறந்த வெளியரங்கில் நடைபெறும்.

இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை பேராயர் அதிவண. கலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு இடம்பெறும்.

(6)

# பரிசளிப்புவிழாவும் நினைவுப் பேருரையும்

சண்டிலிப்பாய், நவ. 19

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும், நிறுவுனர் ஏழூர் இராசரத்தினத்தின் 50 ஆவது நினைவு தினமும், புதிதாக நிறுவப்பட்ட சிறுவர் பூங்காவின் திறப்பு விழாவும் எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமையன்று முற்பகல் 9 30 மணிக்கு மகாவித்தியாலய அதிபர் அ. பேரம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் பிரதம அதிதியாக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா கலந்துகொள்வார். கௌரவவிருந்தினராக திருமதி கிருபாசக்தி தருமதாசன் கலந்து கொள்வார்.

நிறுவுநர் நினைவுப் பேருரையைபுலவர்ம.பார்வதிநாதசிவம்'நுண்மாணநுழைபுலம்' என்ற தலையங்கத்தில் நிகழ்த்துவார் சிறுவர் பூங்காவை பழைய மாணவி திருமதி தவமணி தனபாலசிங்கம் திறந்து வைப்பார். ஆசிரியர்கள் பங்குபற்றும் சிந்துநடைக் கூத்து மற்றும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

[ஐ-135]

# மீண்டும் பூசைகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 19

தெல்லிப்பழை கிழக்கு குருநாதர் சுவாமி கோயிலில் நித்திய நைமித்திய பூசைகள் நடைபெற வசதியாகபிராயச்சித்த அபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

90 ஆம் ஆண்டு அத்தப் பிரதேசத்தில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்ததால் இந்த ஆலயம் பூசைகள் எதுவும் இன்றி மூடப்பட்டிருந்தது.

[ஐ-3]

# வாராந்த நிகழ்வு

கொழும்புத்துறை, நவ. 19

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 'வாக்குக்கு அருணகிரி' என்ற தலைப்பில் ஏ. அனுசாந்தன் உரைநிகழ்த்துவார்.

பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்விற்கான அறிமுக வுரையை சிமெந்துக் கூட்டுத்தாபனம் பேரவை உறுப்பினர் க. அருள்லிங்கம் நிகழ்த்துவார்.

நண்பகல் 12.30 மணிக்கு அடியார்களுக்கு அன்ன தானம் வழங்கப்படும்.

(ஐ - 30)

# நன்றி நவில்கின்றோம்

16-11-99 அன்று தென்மட்டுவில் வேரற்கேணி ஆலயத்தில் நடைபெற்ற திருக்கல்யாண உற்சவத்தின் போது

**பிரம்மஸ்ரீ ப. சோமாஸ்கந்தசர்மாவிற்கு**
சகலகலாவித்தகர் என்ற பட்டம்

வழங்கிக் கௌரவித்ததற்காக மேற்படி ஆலய பிரதம குருவுக்கும், பரிபாலன சபையினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(71060)

உ
சிவமயம்

# மலிவு விற்பனை

★ த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ் ★
352, நாவலர் வீதியில்

இன்று 19-11-99 மலிவுவிற்பனை ஆரம்பம்.

வெளிநாட்டுக்கென தைத்த ஆடை வகைகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.

| | |
|---|---|
| ▶ ரவுசர் | 100 /-, 125/- |
| ▶ சாறி | 100 /- |
| ▶ T சேட் | 100 /- |
| ▶ றன்னிங் சேட்ஸ் | 60 /- |
| ▶ தனிக்கலர் பப்ளின் | 45 /- |
| ▶ பெனியன் | 40 /- |
| ▶ புல் மக்ஸி | 150 /- |
| ▶ பொட்டம் | 75 /- |
| ▶ சேட் சிறியது. பெரியது | 125 /- |
| ▶ கவுண் சிறியது | 75 /- |
| ▶ பிளவுஸ் | 75 /- |

இன்னும் பலவகையான தைத்த ஆடை வகைகள் விற்பன்னக்கு உண்டு.

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
352, நாவலர் வீதி,
நல்லூர்.

[71072]

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இளையதம்பி கனகசபாபதி
[மலாயன் பென்சனியர்]

பிறப்பு 25 – 12 – 1900
இறப்பு 19 – 11 – 1995

திதி: 20 – 11 – 1999

''ஓடி மறைந்தது நான்கு வருடங்கள்
ஓடாமல் நிற்பதோ உங்கள் நினைவுகள்''
எங்களுக்காய் வாழ்ந்த உத்தமரே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[71054]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## திருட்டைத் தடுக்க அயலவர் ஒற்றுமை

குடாநாட்டின் பல பகுதிகளிலும் திருட்டுச் சம்பவங்கள் மலிந்து வருகின்றன. யாழ்ப்பாண நகரத்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் சமீபகாலமாக திருட்டுக்கள் நாளாந்தம் அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

திருட்டுத் தொழிலில் ஈடுபட்டவர்களை புலன் விசாரணைகள் மூலம் கண்டு பிடித்து அவர்களுக்கு நீதிமன்றத்தில் தண்டனை வாங்கிக்கொடுப்பது பொலீஸாருக்கு உரிய கடமை.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிவில் நிர்வாகம் சீராகி விட்டதாகக் கருதப்பட்ட போதிலும், பொலீஸாரால் திருடர்களைக் கண்டு பிடிக்க முடியவில்லை. புலன் விசாரணைகளை நடத்தும் பொருட்டு வெளிக்களப் பணிகளில் ஈடுபடும் அளவுக்குப் பொலிஸ் சேவை இந்த மாவட்டத்தில் பலமானதாக இல்லை.

பொலீஸார் வெளிக்களப் பணிகளைச் செய்வதற்கு உகந்த பாதுகாப்புச் சூழ்நிலை இல்லை என்பதே இதற்குக் காரணம், அவர்களின் பாதுகாப்பு உறுதியற்ற நிலையில் உள்ளது. அதனால் அவர்களால் பொதுமக்களின் உடைமைகளுக்குப் பாதுகாப்பு வழங்க முடியவில்லை!

பொலீஸாரால் திருடர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற நிலையில் பொது மக்களாலும் அது சாத்தியமற்று உள்ளதாலேயே திருடர்களின் கை மேலோங்கி வருகிறது. ஊரடங்கு நடைமுறையில் உள்ளதால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக மக்கள் தமது குடியிருப்புகளுக்குள் முடங்க வேண்டிய நிர்ப்பந்தம்.

அதனால் இரவு வேளையில் அயலவர் வீட்டில் ஒருவர் திடீரெனநோய்வாய்ப்பட்டாலும் கூட அடுத்த வீட்டுக்காரர் உதவிக்குப் போக முடியாத நிலை. படையினர் ரோந்து, தேடுதல் என்று திடீரென வரக்கூடும் என்ற நிலையில் இரவில் ஊரடங்கிய பிறகு வீட்டுப்படிகளைத்தாண்டி ஒழுங்கையில் கால் வைக்கவே மக்கள் அஞ்சுகின்றனர். இந்தச் சூழ்நிலையில் அடுத்த வீட்டிலிருந்து "கள்ளன் கள்ளன்", என்று அவலக்குரல் கேட்டாலும் உதவிக்குப்போகமுடியாதநிலையிலேயே அவர்கள் உள்ளனர்.

திருட வந்தவன் சாதாரண திருடனா அல்லது ஆயுத பாணியா என்ற சந்தேகத்தில் திருட்டு நடைபெறும் வீட்டுக்காரர் கூட, உதவிகேட்டு குரல் கொடுக்க முடியாமல் அச்சத்துடன் அடங்கி விடும் சூழ்நிலையும் உண்டு.

இத்தகைய பின்னணியில் நாட்டு நிலைமை திருடர்களுக்குச் சாதகமாகி உள்ளது

குடாநாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி உள்ளமையும் திருட்டுக்கள் அதிகரிப்பதற்கான காரணங்களில் ஒன்று என்பதனையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு காரணங்களைக் காட்டிக் கொண்டு திருட்டுத் தொழிலை வளரவிடுவதனால் சமூகத்தில் பல பாதிப்புகள் உண்டாகும். ஆகையால் திருட்டுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் தாமே முன்வர வேண்டும்.

அயலவர்கள் சேர்ந்து சூழ்ந்த இடத்திற்குஏற்ப சிலஉத்திகளை வகுத்துத் திருடர்களைக் கையும் மெய்யுமாக மடக்கிப் பிடிக்க உகந்த வழிமுறைகளை வகுத்துக் கொள்ளலாம். அயலவரிடையே ஒற்றுமை இருந்தால் அது சாத்தியம். ஒன்று கூடி ஆலோசனை செய்தால் பயன் தரக் கூடிய உத்திகள் பல கைக்கொள்ளப்படலாம். தன் கையே தனக்கு உதவி என்ற நிலைப்பாட்டுடன் அயலவர் செயற்படாவிடின் நட்டமும் ஆபத்தும் அவர்களுக்கே.

# வேதத்தின் உட்பொருளை விளக்கும் புராணங்களை உணர்ந்து ஓதுக!

சைவ சமயத்தின் உண்மைகளையும் தத்துவங்களையும் எடுத்துக்கூறும் புராணங்கள் சைவ மக்களின் அரும் பெரும் பொக்கிஷமாகும். இறையுணர்வும் கடவுள் பக்தியும் மக்களிடையே ஏற்படுவதற்கு இவை பெரிதும் துணை புரிகின்றன.

சிவபெருமானின் முக் கண்கள் போன்று போற்றப்படும் பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் ஆகிய மூன்றும் இறைவனது பெருமையை உணர்த்துவனவாகும்.

புராணங்கள் வேதத்திற்கு நிகரானவை. இந்த வாய்மையை இறைவன் நாராயணனுக்கு அருளிச் செய்த திருவாக்கால் அறியலாம்.

''வேதப் பொருளில் ஐயப்பாடு தெளிவதற்கும், வேதம் அறியாதார் வேத உண்மைகளை உணர்வதற்கும் ஒரு வேதம் உள்ளது. அது மேலான வேதத்திற்கும் நாம் முற்காலத்தில் அருளிச்செய்த ஆகமத்திற்கும் மாறுபடுவது அல்ல. அவ்விரண்டின் சாரங்களையே கதை வடிவமாகத் திரட்டித் தருவது புராணங்கள். புராணங்கள் படிப்பவர் துன்பங்களைப் போக்குவன. நாம் ஆதியில் புராணங்களை நந்தி அறியக் கூறினோம்'' (கந்தபுராணம்)

### ஞானக் கதிர்

இவ் அருள் வாக்கால் மகத்துவமான மந்திரசக்தி வாய்ந்த வேதங்களுக்குச் சமமான பலனைக் கொடுக்கவல்லது புராணம்என்ற உண்மை புலப்படுகின்றது. விளங்காத வேத பதங்களுக்குப் பொருள் விளக்கும் பொக்கிஷமாகவும் புராணங்கள் திகழ்கின்றன.

தூரத்தே தோற்றும் நறுமாங்கனி வேதம் என்றால் அக்கினியை அருகில் கொணர்ந்து தோலினை அகற்றிச் சதையைச் சுவைக்கும் தன்மையைத் தருபவை புராணங்கள்.

ஆறுமுகநாவலரும் புராணங்களைப் பற்றிக் கூறுமிடத்து, ''பரமசிவன் உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் முதலியவைகளைக் கூறும் வேதவாக்கியத்தின் கருத்துக்களை வலியுறுத்தி விரித்து அறிவிப்பது'' என்கிறார்.

புராணங்கள், சிவபெருமானுடைய திருநீலகண்டம், தரித்திருக்கும் கங்கை, சந்திரன், அரவு முதலானவற்றின் உண்மைகளை உணர்த்துவன. மேலும் விநாயகர், முருகப்பெருமான், அம்பாள், பைரவர், வீரபத்திரர் முதலானோரின் தோற்றங்களையும் வாகன, அங்க, அணிகலன் கூறும் தத்துவங்களையும் தெள்ளத் தெளிய உணர்த்தி நிற்கின்றன.

அத்தகு மேம்பாடான புராணங்களை ஆலயங்களில நியமம் தவறாது ஓதிவரின் அளவற்ற சிவபுண்ணியத்தைச் சம்பாதிக்கலாம் ஆணவமாகிய அகஇருள் அகலவும், பொருட்செல்வம் பூரிக்கவும், பண்புடைய மக்கட் பேறு கிடைக்கவும், பகைமை அகலவும், எண்ணியாங்கு எய்தவும், நன்மணம் நிகழவும், நீண்ட ஆயுள் விருத்தி பெறவும், சுவர்க்கலோக இன்ப நுகர்வு சித்திக்கவும், சிவப்பேறு அடையவும் வழி வகுக்கும். எனவே புராணங்களைப் பயபக்தியோடு படித்து அதிற் கூறப்பட்டுள்ள கருத்துக்களையும் தத்துவ உண்மைகளையும் உணர்ந்து ஆன்ம ஈடேற்றம் அடைவோமாக. ★

**சிவ. சண்முகவடிவேல்**

## 2 ஆயிரம் ஆண்டின் வரவைச் சிறப்பித்து கொண்டாட்டங்கள்

### பொது நிர்வாக அமைச்சு பணிப்பு

வலி. வடக்கு, நவ. 19

2000 ஆண்டின் வருகையை சிறப்பாகக் கொண்டாடும்படி பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் கைத்தொழில் அமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

இது பற்றிய சுற்றறிக்கை ஒன்றை பிரதேச செயலகங்களுக்கும்மற்றும்அரசதிணைக்களங்களுக்கும் அது அனுப்பி வைத்துள்ளது.

2000 ஆண்டை புகுமுக விழாவாகக் கொண்டாடும்படியும் அதனை ஒட்டி பிரதேச செயலகங்கள் மட்டத்தில் விளையாட்டுப்போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றை ஏற்பாடு செய்யும் படியும் குறிப்பிடப் பட்டுள்ளது.

அத்துடன் புகுமுகவிழாவை ஒட்டி பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் வசிக்கும் நூறு வயதுக்கு மேற்பட்டவர்களின் பெயர் விவரங்களை அனுப்பி வைக்கும் படியும் கோரப்பட்டுள்ளது.

### சங்கானை பிரதேச செயலர் பிரிவில்

## காலம் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகளை மேற்கொள்ள வசதி

வலிகாமம் மேற்கு, நவ. 19

சங்கானைபிரதேச செயலர் பிரிவில் காலம்கடந்த இறப்பு, பிறப்பு பதிவுகளை மேற்கொண்டு உடனே இறப்பு, பிறப்பு பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்குப் பிரதேச செயலர் கா. சந்திரராசா நடவடிக்கை எடுத்துள்ளார்.

பிரதேசசெயலர்பிரிவுமுழுவதும் சுமார்60விண்ணப்பங்கள் இதுவரை கிடைத்துள்ளதாகவும்—

இந்த விண்ணப்பங்கள் தொடர்பாக டிசெம்பர் 11 ஆம் திகதி பிரதேச செயலகத்தில் வைத்து யாழ். மாவட்ட மேலதிக பதிவாளர் விசாரணைகள் மேற்கொள்ளவுள்ளார் என்றும்—

அன்றைய தினம் பிறப்பு, இறப்பு பதிவுச் சான்றிதழ் வழங்கவுள்ளதாகவும்—

பிரதேச செயலர் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகள் தமது பிரிவு கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு தேவையானஆவணங்களைத் தயார்படுத்துமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

[ஐ-6-175]

## விவரம் சேகரிப்பு

வலி. மேற்கு, நவ. 19

சங்கானைபிரதேச செயலர் பிரிவில் உள்ள அநாதை இல்லங்களின் விவரங்கள் தாய், அல்லது தகப்பன் மட்டும் உள்ள குடும்பங்களின்பிள்ளைகளின் விவரங்கள் என்பன திரட்டப்படுகின்றன.

பிரதேச செயலர் கா. சந்திரராசாவின் பணிப்பின்பேரில் கிராம உத்தியோகத்தர்கள் மேற்படி விவரங்களைத் திரட்டுகின்றனர்.

(ஐ-6-175)

### நாளை

கார்த்திகை 4

சனிக்கிழமை

திதி: துவாதசி

முன்னிரவு 7.30 வரை:

நட்சத்திரம்: ரேவதி

முன்னிரவு 11.32 வரை.

சுபநேரம்: 3.09 — 4.39

ராகுகாலம்: 9.09 — 10.39

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஒரு மனிதனின் கெட்ட குணங்களை வெறுத்து விடு; ஆனால் அந்த மனிதனை வெறுக்காதே.

விவேகானந்தர்

## கொதித்து ஆறிய நீரைப் பருகுமாறு ஆலோசனை

கொழும்புத்துறை, நவ. 19

தற்போது மழைகாலம் ஆரம்பமாகி உள்ளதால் தொற்று நோய்கள் பரவ வாய்ப்புள்ளதாகவும் எனவே பொதுமக்கள் சுகாதாரம் பேணும் நடைமுறைகளைக் கைக்கொள்வதுடன் கொதித்து ஆறிய நீரைப் பருகுமாறும் யாழ். மாநரக சபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

நீரினால் பரவக்கூடிய வாந்திபேதி, மலேரியா மற்றும் நோய்களின் பாதிப்புகளில் இருந்து பாதுகாப்பதற்கு கொதித்து ஆறிய நீரைப் பருகுவதும், நுளம்புகள் பெருக வாய்ப்பான சூழ்நிலைகளைத் தடுப்பதும் அவசியமாகும் என்றும் —

குறிப்பாக சிறுபிள்ளைகளைக் கொண்ட வீடுகளில் நீரைக் கொதிக்க வைத்துப் பருகுவதைக் கட்டாயமாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் —

அவர் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபை, யாழ். பிரதேச செயலர் பகுதிகளில் பல இடங்களிலும் நீர்தேங்கி நிற்கக்கூடிய ஏது நிலைகள் இருப்பதால் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இப்போதிருந்தே நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் மலேரியாவைக் கட்டுப் படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

வீடுகளில் மழை நீர் தேங்கி நிற்கக்கூடிய குழிகளை மூடுதல், சிரட்டைகள், தகரங்கள் ரயர்கள் போன்றவற்றை அப்புறப் படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம் என்றும், சுத்தம், சுகாதாரத்தை மக்கள் கட்டாயமாக்கிக்கொள்ள வேண்டுமென்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ-30)

## நிகழ்ச்சிகளுக்கு அழைப்பதில்லை; பிரதேச சபை உறுப்பினர் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், நவ. 19

''வலி.மேற்குப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் இடம்பெறும் பல நிகழ்ச்சிகளுக்கு தமக்கு அழைப்பு அனுப்பப் படுவதில்லை'' என்று அந்தப் பிரதேச சபையின் உறுப்பினரான செ. பத்மநாதன் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி. மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் பல நிகழ்ச்சிகள் கடந்த 17ஆம் திகதி நடத்தப்பட்டுள்ளன. இந்த நிகழ்ச்சிகளுக்கோ அல்லது முன்பு நடந்த பல நிகழ்ச்சிகளுக்கோ எனக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை

இந்தச் செயலானது எம்மை அவமதிக்கும் விதத்தில் அமைந்துள்ளது. எமக்கு அறிவித்தல் தராது சபையின் தலைவர் தனதும், தான் சார்ந்த கட்சியினதும் நலனில் அக்கறை கொண்டே செயற்படுகிறார்.

இது எமது சிறப்புரிமையை மீறும் செயலாகும்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்தக்கடிதத்தின் பிரதியை யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அவர் அனுப்பியுள்ளார். (ஐ-3)

## செயலமர்வு

வலிகாமம் கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் தரம் 2 இல் ஆரம்ப கல்வி ஆசிரியர்களுக்கும், தரம் 7,10 ஆகியவற்றில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமான ஐந்து நாள் தொடர் சேவைக்கால செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 24 ஆம் திகதிவரைநடைபெறவுள்ளது

ஆரம்ப கல்வி செயலமர்வு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் [சங்கானை, சண்டிலிப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கு] மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் [உடுவில், தெல்லிப்பழை கோட்ட ஆசிரியர்களுக்கு] நடைபெறும்.

அதேவேளை—

தரம் 7, 10 ஆகியவற்றில் கணித பாட செயலமர்வு சகல கோட்ட ஆசிரியர்களுக்கும் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

[6-152]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்கடைத் திறப்பு விழா

## ரேகான் ஜுவல்லறி

பிரமாதி வருடம் கார்த்திகை வெள்ளி 19-11-99
காலைவரும் சுபநேரம் 10.00 மணிக்கு
திறப்பு விழா ஆரம்பிக்கப்படும்.

அன்பர்கள், நண்பர்கள் கலந்து சிறப்பிக்குமாறு
கேட்டுக் கொள்கின்றோம்.

திரு. திருமதி S. சிவசுப்பிரமணியம்

ஆடியபாதம் வீதி,
நல்லூர் மார்க்கட், கல்வியங்காடு. (71084)



# பாமி பற்பசை அறிமுக விழா

பனை அபிவிருத்திச் சபையால்
பனம் பழத்திலிருந்து தயாரிக்கப்பட்ட

## பாமி பற்பசை

இடம்:- பனை அபிவிருத்திச்சபை
தலைமையகம்
இல. 53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

காலம்:- 19 – 11 – 1999 வெள்ளிக்கிழமை

நேரம்:- காலை 10 00 மணி

ஆரம்பித்துச் சிறப்பிப்பவர்:-

திரு. க. சண்முகநாதன்
அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.

ஆரம்ப கொள்வனவாளர்:-

திரு. சி. வி. கே. சிவஞானம்
தலைவர், யாழ் மாவட்ட பல நோக்கு
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
யாழ்ப்பாணம்.

## பற்பாதுகாப்புக்கு இயற்கையின் கொடை
## "பாமி"

தலைவர், பொதுமுகாமையாளர்,
பணியாளர்கள்,
பனை அபிவிருத்திச் சபை.

இல. 53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/9892)



# UNIVERSITY OF JAFFNA
## SRI LANKA.

University of Jaffna will entertain applications from suitably qualified persons Upto 30th November 1999 for the under-mentioned posts.

* Temporary Assistant Lecturer / Demonstrator in Agronomy
* Temporary Assistant Lecturer / Demonstrator in Animal Science
* Temporary Assistant Lecturer in Agricultural Eoonomics
* Temporary Demonstrator in Agricultural Biology
* Temporary Demonstrator in Agricultural Engineering

Those who are aweiting the results of the final examination may also apply.

| POSTS | SALARY SCALE |
|---|---|
| Temporary Assistant Lecturer | Rs 10,800 p. m (fixed) |
| Tamporary Demonstrator | Rs. 9,000 p. m. (fixed) |

Application form and other details may be obtained from the office of the **Senior Assistant Registrar/ Establishments, University of Jaffna, Sri Lanka** either in person or by sending a Money Order for Rs 20/– per form Those who wish to obtain application form by post are requestcd to send a Money Order / Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self-addressed stamped envelope 23x10 cm in size.

Applicants from the University System / Government Departments / Corporations and statutory Boards should channel their applications through the Heads of respective institutfons.

Applications received after the closing date will be rejected without intimation.

REGISTRAR

(C/9880)


# ஆண்டு நிறைவு விழா நிகழ்வு

கொழும்புத்துறை, நவ 19

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய அதிபர் சி. ஆ. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகயாழ். செயலக மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கமும், திருமதி வி. வைத்திலிங்கமும் கலந்துகொள்வர். சிறப்பு விருந்தினராக யாழ். கல்வித் திணைக்கள பொறியியலாளர் கு. சிவபாலன், வைத்தீஸ்வராக் கல்லூரி முன்னாள் அதிபர் சி. சிவசரவணபவன் (சிற்பி) ஆகியோர் பங்குபற்றுவர்.

பாலர் விசேட செயற்பாட்டறையைச் சிறப்பு விருந்தினர் திறந்து வைப்பார். சிறப்புமலர் வெளியீடும் இடம்பெறும். மலர் ஆய்வுரையை ஓய்வுபெற்ற அதிபர் சி. சிவசரவணபவன் (சிற்பி) நிகழ்த்துவார். (ஐ–30)

# தீவக மாணவருக்கு முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ் பல்கலைக்கழக தீவக மாணவர் அபிவிருத்திக் கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஜி. சீ. ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

அடுத்த மாதம் ஆரம்பமாக உள்ள ஜி. சீ. ஈ. சாதாரண பரீட்சைக்கு தீவகத்தில் உள்ள பாடசாலை மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கில் இந்த முன்னோடிப் பரீட்சை நடத்தப்படுகின்றது.

ஏழு தீவுகளிலும் உள்ள 23 பரீட்சை நிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெற உள்ளது. சுமார் 600 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற உள்ளனர். (ஐ-6)

# ஜி. சீ. ஈ. பரீட்சைக் கருத்தரங்கு

நெல்லியடி, நவ 19

டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. (சாதாரணதரப் பரீட்சார்த்திகளுக்கான இலவச கல்விக் கருத்தரங்குகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகின.

எதிர்வரும் 24 ஆம் திகதி வரை தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் பி. பகல் 3.30மணியிலிருந்து 5 30 மணி வரை இக் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

இக் கருத்தரங்கின் போது பாட நூல் வழிகாட்டிகள் பரீட்சார்த்திகளுக்கு இலவசமாக வழங்கப்படும். [6–109]

# கல்விப்பூங்கா கட்டடத் திறப்புவிழா

தென்மராட்சி, நவ. 19

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் இந்த வருடத்திற்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் நிர்மாணிக்கப்பட்ட சரசாலை அம்பாள் மழலைகள் கல்விப்பூங்கா கட்டடத் திறப்புவிழா இன்று பிற்பகல் 1 30 மணிக்கு மா. குலேந்திரன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன், சாவகச்சேரி நகரசபை செயலாளர் மு. செ. சரவணபவ, ஓய்வு பெற்ற அதிபர் க. [illegible] யோர் கலந்து கொள்வர். (6–117)


# சென் ஜோன் அம்புலன்ஸ் படை

ஸ்ரீலங்கா சென் ஜோன் அம்புலன்ஸ் படையின் வடமாகாண ஆணையாளர் திரு. T. வைத்திலிங்கம் அவர்களின் உத்தரவின்படி யாழ். மத்திய பிரதேசமாகிய தெல்லிப்பழை, உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, கோப்பாய் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள பாடசாலைகளில் கடேற் பிரிவினரையும், லண்டன் டியூக் எடின்பேக்ஸ் விருதுகளைப் பெற சிறப்புப் பயிற்சிகள் அளிக்க உள்ளோம்.

முதலுதவி, நீச்சல், தீயணைப்பு, கராட்டி, உடற்பயிற்சி, அணிநடை, வீதி ஒழுங்கு, பாசறை அமைப்பு, நடைப்பிராயணம், திசையறிதல், வனவியற் குறியீடுகள் முதலிய வற்றிற்கான விசேட பயிற்சிகள் எம்மால் அளிக்கப்படும்.

1999 ஆம் ஆண்டு தேசியபாசறை மார்கழி 27 ஆம் திகதி கண்டியில் ஆரம்பிக்க இருக்கின்றது. பங்குபற்ற விரும்பும் கடேற் பிரிவினர் உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

செல்வி கதிரமலை தயாழினி
பகுதி அத்தியட்சகர்,
கடேற் தொடர்பாளர்.

திரு. க அருந்தவராஜா
உதவி மாவட்ட ஆணையாளா,
18/4-1 சீனியர் ஒழுங்கை,
கலட்டி, யாழ்ப்பாணம்.

(71095)



யாழ்·கூட்டுறவுத் திணைக்கள
உத்தியோகத்தர் நலன்புரிக்

# கூட்டுறவுச் சங்கம்
## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1ஆம் பரிசு – 13763
2ஆம் பரிசு – 14672
3 ஆம் பரிசு – 15264

**ஆறுதல் பரிசுகள்:**
15425 14208 9877
15336 9486

பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள் 26—11—99க்கு முன்னர் 18 / 10 வைமன்வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் பரிசினைப் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் கூ: தி. உ. நலன்புரிக்கூட்டுறவுச் சங்கம்.
(சி/9877)





விருது பெற்ற
வல்வெட்டி
அருட்கவி
## ஆ. கதிர்காமத்தம்பி
பண்டிதர்
அவர்களை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

அருள்மிகு வல்வெட்டி
வேவில் வீரகத்தி விநாயகர் ஆலய தல புராணத்தை இந்துசமய பண்பாட்டுத் திணைக்களம் 1998 இல் விருது பெறும் நூல்களில் ஒன்றாகத் தெரிவு செய்து அதன் ஆசிரியராகிய அவருக்குப் பொற்கிழியும் சான்றிதழும் வழங்கிக் கௌரவித்துள்ளது.

மொஸ்கோ பதிப்பகம்,
நல்லூர்.

(சி/9875)


# கண்ணீர் அஞ்சலி

திரு. ஏ. எம். பாலகிருஷ்ணன்
(காப்பாளர் - வ. பி. போ. ச. பருத்தித்துறைச் சாலை)

அவர்களின் ஏகபுத்திரன்

## செல்வன் பாலகிருஷ்ணன் பிரதீபன்
(க. பொ. த. உ. தர மாணவன் ஹாட்லிக் கல்லூரி)

அவர்களின் அகால மரணத்தையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன், துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சாலை முகாமையாளரும் ஊழியர்களும்
வ. பி. போ. ச. பருத்தித்துறை சாலை

(சி/9895)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊழல் ஒழிப்பு நடவடிக்கை தீவிரம்

# வங்கிக்கடனை மீளச் செலுத்தாத 12 பேர் பாகிஸ்தானில் கைது

பாகிஸ்தானில் வங்கிக்கடன்களை மீளச் செலுத்தாதவர்கள் மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 12 பேர் நேற்றுமுன்தினம் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவ ஆட்சியாளர்களின் ஊழல் ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இது மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்களில் பஞ்சாப் மாகாண முன்னாள் முதலமைச்சர், பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பருக் லெஹாரியின் நெருங்கிய உறவினர் ஒருவர், வர்த்தகர்கள் ஆகியோரும் அடங்குவர்.

பெருமளவில் வங்கிக்கடன் பெற்றவர்கள் அவற்றை மீளச் செலுத்துவதற்கு கடந்த செவ்வாய்க்கிழமை வரை இராணுவ ஆட்சியாளர்கள் கால அவகாசம் வழங்கி இருந்தனர். அந்தக் கால அவகாசத்துக்குள் கடன்களை மீளச் செலுத்தாதோர் மீதே தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் 14 வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்படும். அத்துடன் அவர்கள் 21 ஆண்டுகளுக்கு அரச பதவி வகிப்பதும் தடை செய்யப்படும் என்று இராணுவ ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

வங்கிகளில் பெருமளவு கடன் பெற்று அரசியல் செல்வாக்குகளைப் பயன்படுத்தி அவற்றை மீளச் செலுத்தாமல் இருப்போர் எண்ணிக்கை சுமார் 300 என மதிப்பிடப்பட்டுள்ளது. [ஐ-6-9]

# செச்சினியா மீதான தாக்குதலை நிறுத்த ரஷ்யாவுக்கு அழுத்தம்

குறோஸ்னி, நவ. 19

செச்சினியாத் தலைநகர் குறோஸ்னி மீதான இறுதிக்கட்டத் தாக்குதல்களை ஆரம்பிக்க ரஷ்யப்படைகள் தயாராகியுள்ள நேரத்தில்—

தாக்குதலை நிறுத்தக்கோரி சர்வதேச அழுத்தம் ரஷ்யாவுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் படை நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள லட்சக்கணக்கான அகதிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர் என்றும்—

இதன் காரணமாக தாக்குதல்களை நிறுத்த ரஷ்யா முன்வர வேண்டும் என்றும்— அகதிகளுக்கான ஐ. நா தூதரகத்தின் பணிப்பாளர் மேரி றொபின்சன் கேட்டுள்ளார்.

உணவு மற்றும் குடிதண்ணீர் வசதி இன்றி அகதிகள் பெரும் கஷ்ட நிலையில் உள்ளனர் என்றும்—

தாக்குதல்களை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்றும்— அவர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக ரஷ்யாவுடன் நேரில் பேச்சு நடத்த அந்த அமைப்பின் பிரதிநிதி மொஸ்கோ சென்றுள்ளார்.

தாக்குதல்களை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு மேற்குலகநாடுகள் ரஷ்யாவிடம் கோரியுள்ளன.

# சென்னை மத்திய சிறையில் கலகம்! 10 கைதிகள் உட்பட 12 பேர் பலி!

சென்னை, நவ. 19

சென்னை மத்திய சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வன்முறையில் சிறை அதிகாரி ஒருவர் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். 40 பேர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாக நீதி விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று அரசியல் கட்சிகள் பல கோரியுள்ளன.

குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் கடந்த செவ்வாயன்று மருத்துவமனையில் உயிரிழந்தார். அவரது உயிரிழப்புக்கு அதிகாரிகளே காரணம் என்று கருதிய ஏனைய கைதிகள் வன்முறையில் ஈடுபட்டனர்.

சிறை அதிகாரி ஒருவரையும் ஊழியர் ஒருவரையும் அறை ஒன்றினுள் பூட்டி அதற்கு தீ வைத்ததாகவும் —

பொலீஸார் வன்முறையைக் கட்டுப்படுத்த எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வி அடைந்ததை அடுத்து கைதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் —

இதில் 10 கைதிகள் உயிரிழந்ததாகவும் —

பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 40 கைதிகள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை மத்திய சிறையில் இவ்வாறு கைதிகள் வன்முறையில் ஈடுபடுவது இது மூன்றாவது தடவை என்று தெரிவிக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டிலும் 1996 ஆம் ஆண்டிலும் இவ்வாறான வன்முறைகள் இடம்பெற்றன.

இது குறித்து உடனடியாக விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று அ. தி. மு. க பொதுச் செயலர் ஜெயலலிதா கோரி உள்ளார். [ஐ-6-9]

# தீவிரவாதிகள் ஊடுருவலைத் தடுக்க எல்லைகளை திரிபுரா மூடியது

புதுடில்லி, நவ. 19

திரிபுரா மாநிலத்தில் மேற்குப்புற மாவட்டம் ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊடுருவிய தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து மாநிலத்தின் எல்லைகள் யாவும் மூடப்பட்டுள்ளன.

வங்கதேசத்துக்கும் இந்த மாநிலத்துக்கும் இடையில் உள்ள எல்லை நிலைகளே மூடப்பட்டுள்ளன.

அத்துடன் எந்தவித தாக்குதலையும் எதிர்கொள்ளத் தக்க வகையில் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

மாநில முதல்வர் மணிச்சத்தார் உயர் அதிகாரிகளுடன் தீவிர ஆலோசனை மேற்கொண்டு அச்சுறுத்தல்களை முறியடிக்க பல திட்டங்களை அறிவித்துள்ளார்.

தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 17 பொதுமக்கள் உயிரிழந்தமை தெரிந்ததே. (இ-3)

# பாண்டிச்சேரியில் அரசில்பிளவு; ஆட்சி கவிழும் நிலையில்!

சென்னை, நவ. 19

பாண்டிச்சேரியில் உள்ள தி மு.க.— தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி அரசு எந்த நேரத்திலும் கவிழக்கூடியநிலைஏற்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தி.மு.கவுடன் இணைந்து ஆட்சி அமைத்திருந்த தமிழ் மாநிலக் காங்கிரஸ் அ.தி.மு.க—காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவு வழங்க முடிவு செய்துள்ளது என்றும்—

இதன் காரணமாக தற்போதைய அரசு கவிழும்என்றும்—

அதன் பின்னர் அ.தி.மு.க—காங்கிரஸ்கூட்டணியுடன் இணைந்து தமிழ் மாநிலக் காங்கிரஸ் ஆட்சி அமைக்கலாம் என்றும்— கூறப்படுகின்றது.

இந்த நிலை ஏற்படும் பட்சத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து பாண்டிச்சேரி முதலமைச்சர் ஆர். வி. ஞானகிராமன் தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியுடன் ஆலோசனை நடத்தியுள்ளார். (இ-3)

# கண்ணீர் அஞ்சலி

17-11-99 இல் பருத்தித்துறைக்கடலில் மூழ்கி மரணமடைந்த
ஹாட்லிக் கல்லூரியின் உயர்தர வகுப்பு
மாணவச செல்வங்களாகிய

**சிவநாதன் ரவிசங்கர்**
**சுந்தரலிங்கம் சிவோத்தமன்**
**பூரணமூர்த்தி கந்தர்வன்**
**பாலகிருஸ்ணன் பிரதீபன்**

ஆகியோருக்கு
**நெல்லியடி வாணிபர் கழகத்தின்**
கண்ணீர் அஞ்சலிகள்

அவர்களது ஈடுசெய்ய முடியாத இழப்பினால் துடிக்கும் அவர்களது பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் ஹாட்லிக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நெல்லியடி வாணிபர் கழகம்,
கரவெட்டி.

(சி/9906)

## நாளை பருத்தித்துறையில்......

அறவழிப் போராட்டக்குழுவினால்
வடமராட்சி வலயத்தில் நடத்தப்படும்
அறவழி மழலைகள் கல்விப் பூங்காக்களின்

# ஆக்கப் பொருள்கள் கண்காட்சி

இடம்: வடஇந்து மகளிர் கல்லூரி -பருத்தித்துறை.
நேரம்: காலை 10.30 மணி

தலைவர்: திருமிகு வி. ஜீ. தங்கவேல் ஜே, பி.
முதன்மையாளர்: திருமிகு ஆ சிவசாமி அவர்கள்
(பிரதேச செயலர் பருத்தித்துறை)

★ அழகிய ஆக்கப் பொருள்களைக் கண்டுகளிக்க வருமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

NVDAG அறவழிப்போராட்டக்குழு

(71058)

# ஒத்திவைப்பு

வலிகாமம் தெற்கு, நவ. 19

யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் பரீட்சை ஆணையாளரால் இன்றும் நாளையும் நடத்தப்படவிருந்த உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA) 4ஆம் வருடப்பரீட்சை எதிர்வரும் 27 ஆம் 28 ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெற இருந்த வியாபாரமும் நிதியியலுமான டிப்ளோமா (NDBF) 2ஆம் வருடப்பரீட்சை அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் நடைபெறும். (இ-3-9-152)

# செயலமர்வு

வலிகாமம் தெற்கு, நவ. 19

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் தரம் ஆறு தொடக்கம் தரம் பதினொன்று வரையிலான வகுப்புக்களுக்கு சமூகக்கல்வி, விஞ்ஞானம், சுகாதாரம், மனையியல் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சனத்தொகைக் கல்விச் சேவைக்காலச் செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3-8-152)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
**திரு. வி. சி. சிவநாதன்**
(உதவி முகாமையாளர், இலங்கை வங்கி, நெல்லியடி)
அவர்களின் சிரேஷ்ட புத்திரன்

**செல்வன் ரவிசங்கர்**
(க.பொ.த.உயர்தர மாணவன், ஹாட்லிக் கல்லூரி)

அவர்களின் அகால மரணத்தையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

முகாமையாளரும் ஊழியர்களும்
இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை.

(71108)

# மரண அறிவித்தல்

**சிவஸ்ரீ க. உருத்திரமூர்த்திக்குருக்கள்**
(முருகையாக்குருக்கள்)

அளவெட்டி வடக்கு ஸ்ரீ ஆதிவீரபத்திரர் கோயில் ஆதீன கர்த்தாவும் சிற்பஓவியக் கலைஞருமாகிய சிவஸ்ரீ க. உருத்திரமூர்த்திக்குருக்கள் 17-11-99 புதன்கிழமை சிவஐக்கியம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா—செல்லாச்சி தம்பதிகளின் புதல்வரும் காலஞ்சென்ற முருகையா மற்றும் முத்தம்மா தம்பதிகளின் மருமகனும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் ரவிவர்மன், பரந்தாமன், ஜெயக்குமார், பிறேமகி, அருந்தவக்குமார், ஜீவசங்கர், சுகாஜனன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தனலக்சுமி, உமாதேவி, ரமேஸ்வரன், சிவரஞ்சனி, செந்தினி, ஆகியோரின் அருமை மாமனாருமாவார்.

அன்னாரின் சமாதிக்கிரியைகள் ஸ்ரீ ஆதிவீரபத்திரர் ஆலயத்தில் 18-11-99 இல் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

(71114)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று விக்கெட்டுக்களை இழந்து ஸிம்பாப்வே அணி 156 ஓட்டங்கள்

இலங்கை — ஸிம்பாப்வே அணிகளுக்கு இடையே ஸிம்பாப்வேயில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கடைசியாகக் கிடைத்த தகவலின்படி ஸிம்பாப்வே அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களைப்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித் தலைவர் சனத் ஜெயசூரியா ஸிம்பாப்வே அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

ஆரம்பத் துடுப்பாட்டக் காரர்களாக களமிறங்கிய கவின் றெனியும், க்றான்ட்ப்ளவரும் பொறுமையாக ஆடிய போதும் க்றான்ட் ப்ளவர் 17 ஓட்டங்களுடனும் அடுத்துக் களமிறங்கிய அணியின் உப தலைவர் நீல்ஜோன்ஸனும் 17 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழந்தனர்.

இலங்கை அணியின் அற்புதமான களத்தடுப்பு இதற்குக் காரணமாகியது. பந்து வீச்சில் பிரமோதய விக்கிரமசிங்க 2 விக்கெட்டுக்களையும் சமிந்தவாஸ் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நேற்றைய ஆட்டத்தில் இலங்கை அணியின் வேகப் பந்துவீச்சாளர்களான நுவான் சொய்ஸா, சுரேஷ் பெரேரா ஆகியோர் காயம் காரணமாக விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-8-4)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், நவ. 19

அரியாலை மத்தி இளைஞர் கழகத்தின் இரண்டாவது ஆண்டு நிறைவை ஒட்டி கழகத்தின் விளையாட்டு அவை ஏற்பாடு செய்துள்ள பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்று வரும் மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் பற்றிய விவரம்வருமாறு:-

✶ பிற்பகல் 3 மணிக்கு — யாழ். செயலக வி. க. எதிர் நல்லூர் தெற்கு வி. க.

✶ மாலை 4. 30 மணிக்கு - விக்டரி வி. க. எதிர் விநாயகர் வி. க. (இ-8)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 19

நாவாந்துறை சென் நீக்கிலஸ் சனசமூக நிலையம் தனது 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கழக விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது சுற்று ஆட்டங்களில் சென்மேரிஸ் வி. க. அணியை எதிர்த்து சென் அன்ரனீஸ் வி. க அணி மோதுகிறது. (3-4)

## கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ். ஹற்றன் நஷனல் வங்கி பாடசாலைகள், கழகங்களுக்கு இடையில் நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தில் இடம்பெற உள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் பற்றிய விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3. 30 மணிக்கு — ஹாட்லிக் கல்லூரி அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி 'ஏ' அணி.

★ மாலை 4. 30 மணிக்கு —பற்றீஷியன்ஸ் 'கிறீன்ஸ்' வி. க. அணி எதிர் யாழ். பல்கலைக்கழக 'கோல்ட்ஸ்' வி. க. அணி. (இ-3-8)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ். கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தினால் (வை.எம்.கி.ஏ) நடத்தப்படும் மனித உரிமைகள் விழிப்புணர்வு கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9. 30 மணிக்கு வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-3-5)

# பாகிஸ்தான் 222 ஓட்டங்கள்

மெல்போர்ன், நவ. 19

ஆஸ்திரேலியா — பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் முதலாம் நாளான நேற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 222 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்கிரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ்வோ பாகிஸ்தான் அணியை துடுப்பெடுத்தாட அழைத்தார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் அதிரடி ஆட்டக்காரரர் சஜிட் அன்வர் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். இந்தக் குறையை நிவர்த்தி செய்யும்முகமாக, தொடர்ந்த ஆட்டத்தில்—இளம் வீரர் முகமட்வஸீம் 91 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்த போதிலும் பாகிஸ்தான் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 222 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது.

ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சில்செயின்வோர்ண், முல்லர் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும் மக்ரித், பிளமிங் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி நேற்றைய ஆட்டநேர இறுதியில் விக்கெட் இழப்பு எதுவும் இன்றி 34 ஓட்டங்களை பெற்றது. (இ-4-8)

## நீரிழிவு நோய் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்- நவ. 19

நல்லூர் லயன்ஸ் கழகம் நடத்தும் நீரிழிவு நோய் பற்றிய கருத்தரங்கும் வைத்திய பரிசோதனையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (ஐ-10)

## ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம், நவ. 19

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகினால் தொடர்பாடலுக்கான ஆங்கில வகுப்புகள் மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்டு வருகின்றன,

சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணி தொடக்கம் 12 மணிவரை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இந்த 3 வகுப்புக்களிலும் 150 மாணவர்கள் பயனடைந்து வருகின்றார்கள். (ஐ-5)


## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி — யாழ்ப்பாணம்

கணக்கீடு B. முகுந்தன்

சனி - ஞாயிறு

A/L 2000 பங்குடமை, வருமானச் செலவுக்கணக்கு

A/L 2001 தொங்கல் கணக்கு, இலாப நட்டக் கணக்கு

[71102]



## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர விவரம் திரட்டல்

காலம்: 22 – 11 – 99 (திங்கட்கிழமை)

நேரம்: 9.30 மணி

இடம்: புதிய உயர்கல்லூரி (ஆரியகுளம்சந்தி)

மேலதிக விவரங்கள் உடனடியாக எம்மிடம் கோரப்பட்டுள்ளமையால் க. பொ. த. (சா/த), (உ/த) கல்விச்சான்றிதழ்களின் 2 நிழற்பிரதிகளுடன் 45 வயதிற்குட்பட்ட அனைத்து ஆசிரியர்களையும் தவறாது சமூகம் தருமாறு வேண்டுகின்றோம்.

★ சமுகம் தரத்தவறுபவர்களுக்கு ஏற்படும் பின் விளைவுகளுக்கு நாம் எந்தவகையிலும் பொறுப்பாளிகள் அல்லர்.

செயலாளர்,
பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம்,
யாழ். மாவட்டம்.

(71082)


### 4 மாணவர்..:

(முதலாம் பக்கத் தொடர்)

கல்லூரி அதிபர் ந. குணசீலன், மாணவர்களான இ. சதீஸ், பி. அரவிந்தன் உட்பட பலர் சாட்சியமளித்திருந்தனர்.

அதேநேரம்—

கடலில் மூழ்கிக்காணாமற் போன பாலகிருஷ்ணன் பிரதீபன் (வயது 19—தொண்டமானாறு) என்பவரின் சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டது.

சடலம் மந்திகை வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டது.

இதேவேளை — தொண்டமானாறு வெளிக்கள நிலையம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில், இந்தச்சுற்றுலாவை தமது நிலையம் மேற்கொள்ளவில்லை என்றும்— [illegible] ஆராய்ச்சி செய்வதில்லை என்றும் —தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-109-173)

# சந்திரிகாவை ஆதரிக்கும் முடிவு குறித்து ஈ. பி. டி. பி. பிரமுகர்

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூடிய அக்கறை காட்டி வருகிறார். எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்குவது என எமது கட்சி முடிவு செய்துள்ளது.

வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

சுழிபுரம் சந்தைக் கட்டடம் வட்டுக்கோட்டை சந்தைக் கட்டடம் மற்றும் மலசல கூடத் தொகுதி, அராலி, சித்தன்கேணி ஆகிய இடங்களிலுள்ள சனசமூக நிலையக் கட்டடங்கள் என்பவற்றை திறந்து வைத்த பின்னர் அங்கு உரை யாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வடக்கு — கிழக்கு மக்களின் அன்றாட பிரச்சினைகளை தீர்த்து வைக்கும்படி ஜனாதிபதியிடம் கோரி இருந்தார். அதற்கமைய ஜனாதிபதி சில பிரச்சினைகளை தீர்த்துவைத்துள்ளார். மேலும் 2ஆயிரமாம் ஆண்டில் அதிகளவு பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சிகளை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

வடக்கு — கிழக்கில் உள்ள மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிஉள்ளனர். வடக்கு — கிழக்கு நிர்வாகம் அதிகாரிகளாலேயே மேற்கொள்ளப்படுகின்ற காரணத்தாலும்—

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அதிகாரம் இல்லாமையினாலும்—

சரியான அரசியல் தலைமைத்துவமோ, வழிகாட்டலோ, நெறிப்படுத்தலோ இங்கு இருக்கவில்லை. அதனால் அதிகாரிகள் தாம் நினைத்தவாறு செயற்படுகின்ற துர்ப்பாக்கியநிலை உருவாகிஉள்ளது.

முறையான தேர்தல் நடைபெறும் வரை இடைக்கால நிர்வாகம் ஒன்றினை ஏற்படுத்துமாறு எமது கட்சியின் செயலாளர் நாயகம் தொடர்ந்து கோரி வந்துள்ளார். அதனால் தற்போது இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதியும் அரசும் இணங்கியுள்ளன. இடைக்காலநிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான ஜனாதிபதியின் பிரகடனம் நவம்பர் முதலாம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

ஜனாதியதியின் இவ்வாறான செயற்பாடுகளால் தற்போது பதவிவகிக்கும் ஜனாதிபதி சந்திரிகாவை ஆதரிக்க ஈ.பி.டி.பி. கட்சி முடிவு செய்துள்ளது.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-6)

# சங்கீத, நடன ஆசிரியருக்கு விரைவில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 19

சங்கீதம், நடனம், சித்திரக்கலை ஆகிய துறைகளுக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை யாழ். கல்வி வலயத்தில் விரைவில் நடத்தப்படவிருக்கின்றது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டியவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை வடக்கு—கிழக்கு மாகாண சபை யாழ். கல்வி வலயத்துக்கு அனுப்பியுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு 63 பேர் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் —

மாவட்டத்தில் உள்ள வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு எஞ்கியோர் வடக்கு-கிழக்கில் ஏனைய மாவட்டங்களில் பணியாற்ற விரும்பினால் அந்த இடங்களுக்கு நியமனம் வழங்கப்படும் என்றும்—

மாகாண சபை தெரிவித்துள்ளது,

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியலை அலுவலக நேரத்தில் 'உதயன்' அலுவலகத்தில் பார்வையிடலாம். (ஐ-3-10-30)

## வீடு சேத நஷ்டஈடு:

# நல்லூர் செயலக பிரிவில் 26 பேருக்கு கொடுப்பனவு

வலி,கிழக்கு, நவ. 19

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வன்செயல் காரணமாக வீடுகள் சேதமுற்றோருக்கான நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபாவின் முதற் கட்டக் கொடுப்பனவு 10 ஆயிரம் ரூபா மேலும் 26 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

ஜே—94, ஜே — 95, ஜே—101, ஜே—102, ஜே — 104, ஜே—108, ஜே—109, ஜே—110, ஜே—113, ஜே—114, ஜே—118, ஜே—120, ஜே—122, ஜே-123 ஆகிய கிராம உத்தியோகஸ்தர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கே இக் கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது.

உரியவர்கள் கிராம உத்தியோகஸ்தருடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் வங்கிகளில் பணத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும் என பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-180-86)

### தடுப்பு......

(முதலாம் பக்கத் தொடர்)

தொடர்ந்து ஆஜர் செய்ய ஏற்பாடு செய்துள்ளோம் என்றும் தடுப்பு முகாம் பொறுப்பதிகாரிமேலும் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் கைது செய்யப்படுபவர்களை அவர்களது நியாயாதிக்கத்துக்கு உட்பட நீதிமன்றங்களில் ஆஜர் செய்ய சட்டமா அதிபர்- பொலீஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக மல்லாகம்—பருத்தித்துறை நீதிவான் ஆர். விக்னராஜாவுக்கு பிரதம நீதியரசர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-3-9)

### வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

★ பாதுகாப்புப் படைகளின் உயர் அதிகாரிகள் மற்றும் சமூகத் தலைவர்களுடன் பேச்சுக்களை உடன் ஆரம்பித்து இருதரப்பும் இணங்கக்கூடிய நிகழ்ச்சித் திட்டத்தை உருவாக்குதல்.

★ சுதந்திரமான தேர்தல், சுதந்திரமான பொலீஸ் சேவை ஆகியன உறுதிப்படுத்தப்படும். (இ-3-4)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19 .11. 1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org